மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருப்பதால் மட்டுமே அந்த இடத்திலே காற்றாலை மின்சார உற்பத்தியைத் தொடங்கிவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே காற்றின் அழுத்தம், திசை, வேகம் இவையெல்லாம் கண்டறியப்பட வேண்டும். அந்த ஆய்வின் அடிப்படையில் அந்தப் பகுதிகளிலே காற்றாலை அமைப்பதற்கு வேண்டிய அளவிற்குக் காற்று வீசுமானால், காற்றின் அழுத்தம் இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதிகளிலே, காற்றாலை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் காற்றாலைமூலம் எவ்வளவு மின்சக்தி பெறப்படுகிறது என்பதை அறிய விரும்புகின்றேன். ஏப்ரல், மே, ஜுன், ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்கள் தென்மேற்கு பருவக் காற்று வீசும் சமயங்களாகும். திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தில் அதிகமான காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால், அந்தக் காற்றாலை மின் உற்பத்தியை அடிக்கடி நிறுத்திவிடுகின்றார்கள். இதுபற்றிக் கேட்டால், மின் உற்பத்தியைப் பெறுவதற்குப் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி மற்றும் பழனி வட்டாரப் பகுதிகள் காற்றாலை அமைப்பதற்கான தகுதியான இடங்கள் என்று கண்டறியப்பட்டு, அந்தப் பகுதிகளிலே காற்றாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையிலே அவர் சொல்லியிருக்கின்ற தொப்பம்பட்டி பகுதியிலே மட்டுமல்லாமல், காற்றாலை மின் உற்பத்தியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு, evacuate செய்வதற்கு, அதை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய கட்டமைப்பு வசதிகள் இல்லையென்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்களேதான் காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்று சொன்னால், பல முறை இங்கே விளக்கியிருக்கிறோம். மத்திய அரசு, மாநிலத்திற்கு மாநிலம் ஒரு மின்சார வழித்தடத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியது. மாநிலத்திற்குள் மின்சார வழித்தடத்தை ஏற்படுத்துவது மாநில அரசால் முடியும், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முடியும். ஆனால், அடுத்த மாநிலங்களோடு இணைக்கின்றபொழுது, தென் மத்தியத் தொகுப்பையும், வட மத்தியத் தொகுப்பையும் மின் இணைப்பால் இணைப்பது மத்திய அரசினால்தான் முடியும். மத்திய அரசு நிறுவனமான Power Grid Corporation of India மூலமாகத்தான் முடியும். ஏற்கெனவே, மத்திய அரசிலே 15 ஆண்டு காலம், 17 ஆண்டு காலம் பங்கெடுத்த நீங்கள், இங்கேயும் 5 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்துவிட்டு, அன்றைக்கு இதையெல்லாம் கோட்டைவிட்டுவிட்டு, இன்றைக்கு வந்து நீங்கள் இதைக் கேட்பது நியாயமல்ல, நீங்கள் செய்த தவறுக்கு நீங்களே பொறுப்பாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனாலும்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, இப்பொழுது இந்தக் குறைகளைக் கண்டறிந்து, மத்திய அரசைத் தொடர்பு கொண்டு புதிய வழித்தடம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்பட இருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்த பிறகு காற்றாலை மின் சக்தியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அளவிலேகூட கயத்தாறில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைத்து, அதன் மூலமாக தெப்பகுண்டு, ராசிபுரம்,

[2015 பிப்ரவரி 18

உடுமலைப்பேட்டை மற்றும் சேலம் வரை செல்கின்ற 400 கிலோ வோல்ட் சுற்று வழித்தடத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களே திட்டமிட்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 60 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் விட்ட பணிகளை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்து 60 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. அந்தப் பணிகளெல்லாம் முடிகின்றபோது, இன்னும் முழுமையாக நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டமைப்பு வசதிகள் இருந்தாலும்கூட, சில நேரங்களில் காற்றாலை மின் உற்பத்தியைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகும். ஏனென்று சொன்னால், காற்றாலை மின் உற்பத்தி என்பது-நாங்கள் பல முறை சொல்லியிருக்கிறோம்-இதை அடிக்கடி மற்றவர்கள் ஊடகங்களின் வாயிலாகப் பெரிதுபடுத்துகிறார்கள் என்பதற்காக இந்த விளக்கத்தைச் சொல்கிறேன்.

காற்றாலை மின் உற்பத்தி என்பது நிலையான மின் உற்பத்தியைத் தராது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு நேரத்தில் 3,000 மெகா வாட் உற்பத்தியாகும். திடீரென்று அது 300 மெகா வாட்டுக்கு வரும்; 400 மெகா வாட்டுக்கு வரும். நிரந்தரமாக மின் உற்பத்தியைத் தராது. மின்சார உற்பத்தியைப் பொறுத்தளவிலே, மின்சார விநியோகத்தைப் பொறுத்தளவிலே ஒரு தொழில்நுட்பம் இருக்கிறது. 49.9 சதவிகித frequency மின் அழுத்தம், மின் அதிர்வு எண் 49.9-லிருந்து 50.2-க்குள் இருக்க வேண்டும். அந்த அதிர்வு எண்ணைச் சரியாகக் கடைப்பிடிக்கவில்லையென்று சொன்னால், இருக்கின்ற கட்டமைப்பு வசதிகளான டிரான்ஸ்பார்மர் மற்றும் மின் வழித்தடங்கள் அத்தனையும் பழுதடைந்துவிடும். இந்தக் காற்றழுத்தம் frequency-மின்சார அதிர்வு எண்ணைக் குறிப்பிட்ட கட்டுக்குள் வைத்துக்கொண்டு சீரான விநியோகம் செய்தால்தான், அந்தக் கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாக்க முடியும். ஆகவேதான், இந்தக் காற்றாலை மின் உற்பத்தி திடீரென்று ஏறுகின்றபோது, அந்த frequency அதிகரிக்கும்; அப்பொழுது அங்கே மின் உற்பத்தியை back down -தடை செய்ய வேண்டியிருக்கும் அல்லது திடீரென்று கீழே இறங்கிவிடும். அப்பொழுது இந்த மின்சார அதிர்வு எண்ணைச் சமன் செய்வதற்காக, மின்சாரக் கட்டமைப்பு

2015 பிப்ரவரி 18]

வசதிகளைப் பழுதடையாமல் பாதுகாப்பதற்காகத் தொழில்நுட்ப ரீதியாக எடுக்கப்படுகின்ற முடிவே தவிர, வேறொன்றும் இல்லை. இந்தத் தொழில்நுட்ப விஷயங்கள் தெரியாததால், சிலர் மேலெழுந்தவாரியாக இந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். ஆனால், இப்பொழுது உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காகவும், வழித்தடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளைப் புயல் வேகத்தில் எடுத்து வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2—

வீடுகள் கட்டுதல்

***41546—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதியிலுள்ள எம்.சி. சாலை, ரஃபீக் நகர், சாமி நகர், சலாவுதீன் நகர், சான்றோர் குப்பம் ஆகிய பகுதிகளில் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.